## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு சங்கராச்சார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரை

## 1. அனுக்ரஹ பாஷணம் - பேளூர்



ஜகத்குரு தனது அனுக்ரஹ பாஷணத்தில், உருவமற்ற பரமாத்மாவை மனத்தால் எளிதில் புரிந்து கொள்ள முடியாததால், இறைவன் பல பெயர்களையும் வடிவங்களையும் எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார். ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் மக்கள் மத்தியில் கடவுள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தினார், மேலும் பல்வேறு வடிவங்கள் ஒரே தெய்வீகத் தன்மை கொண்டவை என்பதை சுட்டிக்காட்டினார். விஜய யாத்திரைகளை மேற்கொள்வது, சீடர்களிடையே தர்மத்தில் நம்பிக்கையை ஏற்படுத்துவது மற்றும் தர்மத்தைப் பரப்புவது ஆச்சார்யர்களின் கடமை என்று ஜகத்குரு தெரிவித்தார். ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகளின் அடிச்சுவடுகளைத் தான் பின்பற்றி வருவதாகவும், ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மகாஸ்வாமிகள் ,மக்கள் கடவுளை வணங்கவும், நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவும், ஷ்ரேயங்களை அடையவும் கூடிய பல மையங்களை நிறுவியதாகவும் கூறினார்.

### மக்களிடையே தர்மத்தைப் பரப்புவதின் முக்கியத்துவம் – ஜகத்குருவின் அனுக்ரஹ பாஷணத்தில் கூறிய உபதேசம்

**ஒரே பரம்பொருளின் பல நாமங்களும் வடிவங்களும்**

# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

ஜகத்குரு தனது அனுக்ரஹ பாஷணத்தில், பரமாத்மா இறுதியில் உருவமற்றதும், நாமரூபங்களைக் கடந்ததுமான தத்துவம் என்று விளக்கினார். ஆனால் மனித மனத்திற்கு இத்தகைய நுட்பமான, உருவமற்ற உண்மையை நேரடியாக தியானிப்பது எளிதல்ல.

அதனால் பக்தர்கள் எளிதில் இறைவனை வழிபட்டு தியானிக்கும்படி, பரம்பொருள் பல நாமங்களையும் பல்வேறு வடிவங்களையும் எடுத்துக் கொள்கிறார்.

ஆதி சங்கராச்சாரியார் மக்கள் மத்தியில் கடவுள் மீது உறுதியான நம்பிக்கையை உருவாக்குவதில் மிகப் பெரிய பங்கு வகித்தார். அவர் போதித்ததாவது:

- மக்கள் வழிபடும் பல்வேறு தெய்வங்கள்
- கோவில்களில் காணப்படும் பல நாமங்களும் வடிவங்களும்

இவை அனைத்தும் ஒரே பரம்பொருளின் வெளிப்பாடுகளே என்பதே.

இந்த உபதேசத்தின் மூலம் அவர் சமய வேறுபாடுகளை நீக்கி, வழிபாட்டின் பல்வகைத் தன்மையின் பின்னால் இருக்கும் **ஒரே தெய்வீகத் தத்துவத்தை** மக்களுக்கு உணர்த்தினார்.

**ஆச்சார்யர்களின் கடமை**

ஜகத்குரு கூறியதாவது, ஆச்சார்யர்களின் முக்கிய பொறுப்பு:

- மக்களிடையே பரவலாகச் சுற்றிப் பயணித்தல்
- தர்மத்தின் கொள்கைகளை போதித்தல்
- கடவுள் மீது நம்பிக்கையை வளர்த்தல்
- சமுதாயத்தை நெறியுள்ள வாழ்வின் பாதைக்கு வழிநடத்தல்

இவ்வாறான ஆன்மீகப் பயணங்கள் பாரம்பரியமாக **“விஜய யாத்திரைகள்”** என்று அழைக்கப்படுகின்றன. இந்த யாத்திரைகளின் மூலம் ஆச்சார்யர்கள் ஒரு இடமிருந்து மற்றோர் இடம் சென்று ஆன்மீக உபதேசங்களைப் பரப்பி, சமுதாயத்தை உயர்த்துகின்றனர்.

**குருவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்**

# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

ஜகத்குரு தாம் தமது பரமபூஜ்ய குருவான ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமி அவர்களின் அடிச்சுவடுகளை மட்டுமே பின்பற்றி வருகிறேன் என்று பணிவுடன் கூறினார்.

அந்த மகான் பல இடங்களில் ஆன்மீக மையங்களை நிறுவியதை அவர் நினைவுகூர்ந்தார். அந்த மையங்களில் மக்கள்:

- இறைவனை வழிபடவும்
- ஒன்றிணைந்து கூடவும்
- நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவும்
- ஆன்மீக செயல்களில் ஈடுபடவும்

வாய்ப்பு பெறுகின்றனர்.

இத்தகைய மையங்கள் மனிதர்கள் **ஷ்ரேயஸ்** (உயர்ந்த ஆன்மீக நன்மை) அடைவதற்கான இடங்களாக விளங்குகின்றன.

### உபதேசத்தின் மையச் செய்தி

ஜகத்குருவின் அனுக்ரஹ பாஷணத்தின் முக்கிய கருத்துகள்:

- இறைவன் இறுதியில் உருவமற்ற பரம்பொருள்.
- ஆனால் பக்தர்களுக்காக அவர் பல வடிவங்களில் வெளிப்படுகிறார்.
- எல்லா வடிவங்களும் ஒரே தெய்வீகத் தத்துவத்தை பிரதிபலிக்கின்றன.
- தர்மத்தைப் போதித்து மக்களிடையே நம்பிக்கையை வளர்ப்பது ஆச்சார்யர்களின் புனித கடமை.
- ஆன்மீக மையங்களில் கூடி பக்தி, நல்ல சிந்தனை, தர்ம வாழ்க்கை ஆகியவற்றில் ஈடுபட்டால் மனிதர்கள் ஆன்மீக முன்னேற்றத்தையும் **ஷ்ரேயஸையும்** அடைய முடியும்.

Vijayayatra : Belur: February 26, 2012
Link https://vijayayatra.sringeri.net/archiveyatra/belur-february-26-2012/
This e book link : https://portal.voiceofjagadguru.com/uploads/ebooks/69cbf89c8ed20_tamil.pdf

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸந்தேகம் தெளிதல்

**(பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓம்காரானந்தர்)**

**கேள்வி : நாம் இறைவனின் கையிலிருக்கும் கருவிகள் என்பதும் இறைவன் விருப்பப்படி யெல்லாம் நம்மை ஆட்டு விக்கிறார் என்பதும் உலகை உணர்ந்த மஹான்களின் கூற்றாகுமெனில் தீவிரவாதிகளைத் தூண்டி விட்டு ஒன்றுமறியா பாமர மக்களைக் கொன்று குவிப்பதும் இறைவன் செயல் தானா? தயவு செய்து விளக்கிக்கூற வேண்டுகிறேன்.**

**ஸ்வாமி ஜீ :** இதுவும் இறைவன் செயலே என்று ஏற்றுக்கொள்வது நமக்கு மன அமைதியைத் தரும். ஆனால் தவறு செய்பவர்கள் அதை இறைவன் செயல் என்று கருதுவது தவறு. வினைக்கேற்ற விளைவை அவர்கள் அனுபவித்துத்தான் ஆக வேண்டும். அறவழியில் வாழ்பவர்களே உண்மையில் இறைவன் கையில் கருவியாக விளங்குவதாக கருதிக்கொள்ள முடியும். மனதிற்குத் தெளிவையும் நிறைவையும் இன்பத்தையும் தரும் உயர்ந்த பாவனைகளைத் தவறாகப் பொருள்படுத்திக் கொள்ளக்கூடாது. இறைவன் நமக்குக் கொடுத்திருக்கும் செயலாற்றும் உரிமையை அறவழியில் பயன்படுத்தினால் மட்டுமே அவன் நம்மைத் தூய தூண்டுவதையும், அவன் கையில் கருவியாக இருப்பதாகவும் நம்மால் உணர முடியும். அந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்தும் பொழுது அவ்வாறு உணர முடியாது. உண்மையில் உயிர்கள் புரியும் நன்மை தீமைகளுக்கு இறைவன் ஒருபொழுதும் பொறுப்பானவர் அல்ல. ஸ்ரீ இராமக்ருஷ்ணர் உதாரணம். இங்கு சிந்திக்கத்தக்கது.

ஒருவன் விளக்கொளியில் இராமாயணம் படிக்கிறான். மற்றவன் போலிப் பத்திரம் தயாரிக்கிறான். விளக்கொளி இருவருக்கும் பொதுவானது. அதுபோல இறைவன் நன்மை தீமை இரு செயல்களுக்கும் பொதுவானவர். நாம் புரியும் நன்மை தீமைக்கு நாமே முழுப்பொறுப்பாவோம்.

**கேள்வி : கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் இவற்றின் மூலம் உலக பந்தத்திலிருந்து அகன்று முக்தி அடையலாம் என்று சொல்கிறார்கள். அதில் சிலர் கர்மயோகமே சிறந்தது என்றும், சிலர் பக்தி மார்க்கமே சிறந்தது என்றும், சிலர் ஞானமே முக்திக்கு வழி என்றும் சொல்கிறார்கள். ஆனால் கர்மம், பக்தி, ஞானம் பின்னிப் பிணைக்கப்பட்டது என்றும், ஒன்றில்லாமல் ஒன்று இல்லை என்று கருதுகிறேன். சரியா?**

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

**ஸ்வாமி ஜீ** : தாங்கள் கருதுவது முற்றிலும் சரியே. கர்மயோகம் மனத் தூய்மையை வழங்குகிறது. பக்தி எனப்படும் உபாஸனை மன ஒருமுகப்பாட்டையும், பரந்த மனப்பான்மையையும் வழங்குகிறது. ஞானம் எனப்படும் தத்வ ஆராய்ச்சி பொய்ப்பொருள் எது? மெய்ப்பொருள் எது? என்பதை நன்கு உணர்த்துகிறது. ஸாதகன் முக்தியின் பொருட்டு இம் மூன்றையும் முறையாகப் படிப்படியாக பின்பற்றக் கடமைப்பட்டிருக்கிறான் என்றே ஸாஸ்த்ரங்கள் உபதேசிக்கின்றன.

**கேள்வி : மந்த்ரம், ஸ்லோகம், ஸூத்ரம், பாஷ்யம், வ்யாக்யானம், வார்த்திகம், டீகா, டிப்பணீ, இந்த எட்டு சொற்களுக்கும் பொருள் விளக்கம் தர வேண்டுகிறேன்.**

**ஸ்வாமி ஜீ** : மந்த்ரம்: ஓதுபவனை அல்லது சிந்திப்பவனை பாபச் செயல்களிலிருந்தும் அதன் விளைவாகிய துன்பங்களிலிருந்தும் விடுவித்து, அறச் செயல்களில் ஈடுபடுத்தி, அதன் விளைவாகிய இன்பத்தில் வைத்துப் பாதுகாப்பது என்ற பொருளைத் தரும். ஸ்லோகம் : மேற்கோள் என்றும், சோகத்தை நீக்கும் பாடல் எனவும் இரு பொருளைத் தரும் சொல் இது. ஸூத்ரம் : எழுத்துக்கள் மிகக் குறைவாக இருக்க வேண்டும். கருத்து ஐயத்திற்கு இடம் தராததாக இருக்க வேண்டும். சுருக்கமாக இருக்க வேண்டும். விரிவான விளக்கத்திற்கு இடம் தருவதாகவும் இருக்க வேண்டும். பொருளற்ற சொற்கள் இருக்கலாகாது. பிழை காண முடியாததாய் இருக்க வேண்டும். பாஷ்யம் : ஸூத்ரத்தின் பொருளை அதன் வரிசை முறையிலேயே விளக்குதல்; தான் கூறிய பொருளைத் தானே தகுந்த சான்றுகளுடன் தெளிவுபடக் கூறுதல் பாஷ்யம் என அழைக்கப்பெறும். வ்யாக்யானம்: பாடல்களின் சொற்களைப் பிரித்து, சொற்பொருள் கூறி, சொல்லின் இலக்கண அமைப்பை விளக்கி, பாடல்களிலுள்ள சொற்களை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் வாக்யமாக அமைத்து, ஐயங்களை எழுப்பி, தகுந்த மேற்கோள்களைக் காட்டி விடைகூறி, விரித்து, விளக்கிச் சொல்லுவதை வ்யாக்யானம் என்று அழைக்கிறோம். வார்த்திகம்: ஒருவர் எழுதியுள்ள நூலை அல்லது உரையை விருப்பு வெறுப்பின்றி அறவழியில் விமர்சனம் செய்தல்-கூறியதன் சிறப்பைக் கூறுதல்; கூறாமல் விட்டு விட்டதைச் சுட்டிக் காட்டல், தவறாகக் கூறியதையும் சுட்டிக்காட்டல் ஆகிய தன்மையை உடையது முறையான விமர்சனம் ஆகும். டீகா: சுருக்கமான விளக்க உரை. டிப்பணீ : குறிப்புரை

(தொடரும்) நன்றி : வேதநெறி, வெப்: https://www.vedaneri.org/

# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தர்மங்கள்.

24. ஒருவனைப் 'பாபி' என்று கூறலாகாது. உண்மையாக அவன் பாபம் செய்யாமலிருந்தால், அந்த பாபத்தைச் செய்த தோஷம் சொன்னவரை வந்தடையும். அவன் பாபம் செய்திருந்தாலோ, அவன் பாபத்தை கூறியதால் நமக்கு அதில் பாதி பாபம் வரும். கருடன் பாம்பைக் கொல்லும் போது ஏகதர் என்பவர் இது பாபம் என்றார். அவர் ஏறிச்சென்ற தெய்வ விமானம் பூமியில் விழுந்தது. இதைக் கண்ட தம்பி த்விதன் நன்றாகக் கொல் என்றார். அவர் விமானமும் அவனியில் வீழ்ந்தது. த்ரிதன் என்ற இளையவன் மௌனமாகச் சென்றான். அவன் விமானம் விழாமல் சென்றது.

25. தெய்வம், கர்மபலன், பரலோகம், மறுபிறப்பு, ஸ்வர்க்கம், நரகம் இவை உண்டோ இல்லையோ என ஸந்தேகிக்கக் கூடாது. வேதம் என்ற தேவவாக்கு அவைகள் உண்டு எனக் கூறுகிறது. நம்மைவிட சிறந்த அறிவும் பரந்த நோக்கமுமுள்ள மஹரிஷிகள் அதை ஆமோதிக்கின்றனர். தாங்களும் வேதம் கூறிய கர்மாக்களைச் செய்து பலனை அனுபவித்துப் பார்த்து, நாமும் அதை அனுஷ்டித்து நன்மையடையும் பொருட்டு உபதேசித்தனர். எவர் பொய் கூறுவது பாபம் என்கிறார்களோ அவர்களே பொய்யாக இவைகளை எழுதிவைப்பார்களா ? அப்படி எழுதுவதால் அவர்களுக்கு என்ன பயன்? ப்ருகு எனும் முனிவர் ஸோமகாந்தன் எனும் வேந்தனின் பூர்வ ஜன்ம சரிதத்தைச் சொல்லும்போது அவன் இவர் சொல்வது நிஜமோ என ஐயங்கொண்டான். உடனே ஆயிரம் வலியன், குருவிகள் குஷ்டரோகமுள்ள அவன் உடலைக் குத்த ஆரம்பித்தன. தன் தவறை உணர்ந்து முனிவரிடம் மன்னிப்புக் கேட்டான். இங்ஙனம் நம்பாதபோது ஒவ்வொருவருக்கும் துன்பம் வரவேண்டுமென எதிர்பார்ப்பது அறியாமை. வைத்யர், மருந்து நன்மை தருமோ தராதோ என ஸந்தேஹித்து மருந்து உண்ணாமல் இருக்கிறோமா? கண்ணால் பாராததை நம்புவதில்லை என வாதம் கண்மூடித்தனமானது. நமது உயிரையோ, புத்தியையோ நாம் கண்ணால் பார்க்கவில்லை. ஆதலின் நாம் உயிரில்லாதவன் புத்தியில்லாதவன் என ஒப்புவோமா? கடோபநிஷத்தில், இறந்தபின் ஜீவன் உண்டா இல்லையா? பரலோகம் உண்டா இல்லையா? மறுபிறவி உண்டா இல்லையா? என நசிகேதன் யமனையே கேட்கிறார். "நான்தான் ஜீவனைக் கொண்டு செல்பவன். என் உலகில்தான் விசாரணை, சிக்ஷை, புண்ய பாபத்திற் கேற்றபடி மறுபிறவி உண்டு" என்கிறார் யமன். நம்பு! நம்பு!! நம்பு!!!

26. தலைமயிர், மீசை, நகம் இவைகளை க்ருஹஸ்தன் ஒரு மாதத்திற்கு மேல் வளர்க்கக் கூடாது, மனைவிகர்ப்பிணியானாலும், தாய் தந்தை இறந்து ஒரு

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

வருஷம் ஆகும் வரையும் வபநம் கூடாது. ச்ராத்தத்திற்கு முன் ஒரு பக்ஷமேனும் வபநம் செய்துகொள்ளாமல் இருக்க வேண்டும். காரணமின்றி இவைகளை வளர்க்கவும் கூடாது.

27. யாசகன் வருவானோ என அஞ்சி, தெருக் கதவை காலை மாலைகளில் சாத்தக்கூடாது.

28. தேவ நிந்தை, வேத நிந்தை, பெரியோர் நிந்தை கூடாது. அது மிக பாபகரமானது. சிவ நிந்தை செய்த ப்ரும்மாவின் சிரத்தை வீரபத்ரர் கிள்ளி எறிந்தார். ஹிம வானும் மேனையும் சிவனைச்சிறந்த தெய்வமென எண்ணி கன்யகாதானம் செய்தால் அவர் முக்தி பெறுவர். தங்களுக்கு ஹிமயத்தால் கிடைக்கும் நன்மை கிட்டாது எனத்தேவர்கள்; அவர்களுக்கு சிவனிடம் சிறிது மதிப்புக் குறையும்படி; அவர் ச்மசானவாஸி, விரூபர் என்பது போன்ற சிவ நிந்தை செய்யும்படி விஷ்ணுவைத் தூண்டினர். அவர்சிவ நிந்தை எப்படியும் பாபமென அதை மறுத்து, சிவனையே சிவநிந்தை செய்யும்படி வேண்டினார். அவரும் அப்படியே கிழவர்வடிவமெடுத்து, அவர்களிடம் சிவ நிந்தை செய்தார், என புராணம் கூறுகிறது. வேத வேத்யனான தேவனும் வேதமும் ஒன்றே. அவரை அர்ச்சிப்பவர்களை நிந்தித்தாலும் நரகம் உண்டாகும்.

29. தீபத்தை வாயினால் ஊதக்கூடாது. புருஷன் ஒருபோதும் அணைக்கவேகூடாது.

30. ஜலத்திலும் எண்ணையிலும் நம் நிழலை பார்க் கக்கூடாது.

31. பற்களைச்சத்தம் கேட்கும்படி நெறிக்கக்கூடாது. பற்களை நெறிப்பது கோபக்குறியாம். ராக்ஷஸ ஸ்வபாவ முமாகும். பேய் பிடித்தவன் செயலுமாகும்.

(தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## சாஸ்திரம் அறிவோம்

**(ப்ரஹ்மஶ்ரீ சாம வேத நித்ய அக்னிஹோத்ரி நங்கநல்லூர் ஶ்ரீ ஶ்ரீநிவாஸ சௌத்ரிகள்)**

**கேள்வி :** கைகளில் வலையல்கள் இல்லாமல் கோலம் போடுவது, விளக்கு ஏற்றுவது சரியா ?

**பதில் :** கைகளில் வளையல்கள் அவசியம் போட்டுகொண்டு தான் பெண்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்ய வேண்டும். சிறு வயது பெண் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கைகளில் வளையல் போட்டுக்கொள்ள வேண்டும். கல்யாணம் ஆனா பின் காலில் மெட்டி அவசியம். கால்களில் கொலுசு எல்லா பெண்களும் போட்டு கொள்ள வேண்டும். இவை யாவும்  மங்கள சின்னங்கள். பெண் குழந்தைகள் பிறந்தது முதல் மங்கள சின்னங்களை அணிந்து கொள்ள வேண்டும். ஸுமங்கலிகளின் அடையாளங்களாக வளையல், கொலுசு, மெட்டி போன்றவை விளங்குகிறது.

**கேள்வி :** ஆண்கள் விளக்கு ஏற்றலாமா ?
**பதில் :** விளக்கு ஏற்றுதல் என்பது ஒரு பொதுவான தர்மமாகும். இதற்கு ஆண் பெண் பேதமில்லை.  பூஜை செய்யும் சமயத்தில் ஆண்களும் விளக்கு ஏற்றலாம். வீட்டு பெண் விளக்கு ஏற்ற முடியாத நாட்களில் ஆண்கள் தாராளமாக பூஜை அறையில் விளக்கேற்றி அவசியம் நித்திய பூஜையை செய்ய வேண்டும்.

**கேள்வி :** ஆண்கள் ஒற்றை வஸ்திரமோ அல்லது இன்றைய கலாசாரமான அரை டவுசர் போட்டுக்கொண்டு ஸ்வாமிக்கு பூஜை அல்லது நைவேத்யம் செய்கிறார்களே இது  சரியா ?

**பதில் :** ஒற்றை வஸ்திரம் என்பது சரியான முறை இல்லை. எந்த ஒரு பூஜை, விசேஷங்கள், கர்மாக்கள்  என்றாலும்  ப்ரஹ்மச்சாரியாக இருந்தால் தட்டு வஸ்திரம் 4 முழம், முதல் 8 முழம் வரை அணிய வேண்டும். அதே நேரத்தில் கல்யாணம் நடந்து கிரஹஸ்தன் ஆகி விட்டால் ஸந்த்யா வந்தனம் செய்யும் பொழுது கூட அவசியம் பஞ்சகச்சம் தான் அணிந்து கொண்டு செய்ய வேண்டும். அதே போல் அவசியம் ப்ரஹ்மச்சாரியாக இருந்தாலும் சரி கிரஹஸ்தனாக இருந்தாலும் சரி வேஷ்டிக்கு மேல் இடுப்பு வஸ்திரம் ஒன்றை அணிந்து கொண்டுதான் எந்த ஒரு நல்ல காரியத்தையும் செய்ய வேண்டும்.
((தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# குறியும் நெறியும்

**(ஸ்வாமீ பூர்ணானந்தர்)**

**ஆத்ம - அநாத்ம விவேகம்**

'நானிருக்கிறேன்' என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆதலால் ஆத்மாவின் இருப்புத்தன்மையை விளக்க வேண்டியதில்லை.

அறிபவனே ஆத்மா எனப்பார்த்தோம். அறிபவன் ஜடமாயிருக்கமுடியாது. எனவே ஆத்மா உணர்வே உருவானது. அறிவு, அறியாமை இரண்டையும் அறிவதால் அறிவுமயமானது ஆத்மா.



**ஆத்மா ஆநந்தமே வடிவானது, எப்படி?**

நமக்கு துக்க அநுபவமிருப்பதால். ஆத்மா 'ஆநந்தமே வடிவானது' என்பதை மட்டும் சற்று ஆராய்வோம்.

நமக்கு எது இன்பம் தருகிறதோ அதிலேயே நம் ப்ரியம் அன்பு இருக்கிறது. நமக்காக -நம் சுகத்திற் காகவே - நாம் உலகப் பொருட்களை நேசிக்கிறோம். நமக்குச் சுகம் தராத எதையும் யாரையும் (நம் மனைவி /கணவன், குழந்தையாக இருந்தாலும்) நாம் விரும்புவதில்லை. ஆகவே நமக்கு இன்பம் தருவதிலேயே விருப்பம் ஏற்படுகிறது. எதில் நமக்கு விருப்பம் இருக்கிறதோ அது நமக்கு இன்பம் தருவதாக இருக்கிறது. உலகிலேயே ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம (தைத். உபநிஷத் 2-1) விஜ்ஞானம் ஆநந்தம் ப்ரஹ்ம (ப்ரு. உபநிஷத் 3-9-28).

இதில் முதல் இரண்டு வாக்கியங்களும் மெய்ப்பொருளின் ஸ்வரூபத்தை விளக்குகின்றன: மூன்றாவது வாக்யம் கடவுளும் ஜீவனும் ஒன்று என்பதைக் கூறும் மஹாவாக்யமாகும். இதன் பொருள் ப்ரஹ்மம் (மெய்ப்பொருள்) தூய இருப்பு (Pure Existence) உடையது. 2 (Pure Consciousness) மற்றும் ஆநந்த (Pure Bliss) மயமானது. அத்தகைய ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்றே என்பதாகும். இது நமது ரிஷிகளால் கண்டறியப்பட்ட உண்மைப் பொருளைப்பற்றிய உண்மையாம். இதுவே நமது எல்லா வேதங்களின் உட்கருத்தாகும். இதை அறிந்தவனே ஞானியாகிறான். இதை அறிந்தவனே எல்லா துன்பங்களையும் கடக்கிறான்.

(தொடரும்) நன்றி : வேதநெறி வெப்: https://www.vedaneri.org/


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# வேத மந்திரங்களின் சிறப்புகள்

**க்ருஷ்ண யஜுர் வேத தைத்திரீய 1.1.5. அனுவாகம் 5**
**பௌதீக சரீரத்தைப் புனிதப்படுத்துதல்**
**(14 யஜூஸ்: 3 ரிக்)**
**சந்தம்: 1, காயத்ரி; 6.14 ஏகபாத காயத்ரி)**

1) ஒளிமிக்க சூரியனின் குறையற்ற, புனிதமான கதிர்களால் ஸவிதா தேவன் உங்களைத் தூய்மைப்படுத்துவானாக! பரமாத்மாவின் ஞானஒளி என் மனம், வாக்கு, உடல் ஆகிய அனைத்தையும் தூய்மைப்படுத்தட்டும்; அறியாமை, பாவம், அசுத்தம் ஆகியவை நீங்கட்டும். ("ஸவிதா பகவான் தனது தூய சூரியக் கதிர்களால் உங்களை உடலாலும் மனதாலும் ஆன்மீக ரீதியிலும் பரிசுத்தப்படுத்துவானாக." )

2) தெய்வீகமான நீர்களே! நீங்கள் முன்னின்று இந்த யாகத்தை நடத்திச் செல்லுங்கள். யாகத்தின் தலைவரான யஜமானனையும் முன்னேற்றுங்கள். வ்ருத்ராசுரனை வென்ற போரில் இந்திரன் உங்களைத் தனது துணையாகத் தேர்ந்தெடுத்தான்; அதுபோல நீங்களும் இந்திரனைத் தேர்ந்தெடுத்து அவனுக்கு வெற்றியை அளித்தீர்கள். (இறையருளாகிய புனித சக்தியே! என் வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுத்து, தடைகளை நீக்கி, ஆன்மீக வெற்றியை அளிப்பாயாக).

3-4) நீங்கள் புனித நீரால் சுத்திகரிக்கப்பட்டவர்களாக ஆகுங்கள். அக்னி தேவனுக்கு பிரியமானதாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் உங்களை நான் புனித நீரால் தெளிக்கிறேன். அக்னி மற்றும் சோம தேவதைகளுக்காக இச்சுத்திகரிப்பைச் செய்கிறேன். (என் மனமும் செயல்களும் தூய்மையடைந்து, ஞானத்திற்கும் இறையருளுக்கும் தகுதியானதாக ஆகட்டும். )

5) தெய்வீகமான கர்மம் நிறைவேறுவதற்கும், தேவர்களுக்கான யாகத்திற்கு ஏற்றவாறும் நீங்கள் நன்கு ஆயத்தமாக இருக்கட்டும். (இவை சாதாரணப் பொருட்களாக இல்லாமல், இப்போது தெய்வாராதனைக்குத் தகுந்த புனிதப் பொருட்களாக ஆகட்டும்).

(தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# சில உபநிஷத்துக்களின் விளக்க உரை

## श्वेताश्वतरोपनिषत्

### ஶ்வேதாஶ்வதரோபநிஷத்

**ॐ सहनाववतु । सह नौ भुनक्तु ।**

**तमेकनेमिं त्रिवृतं षोडशान्तं शतार्धारं विंशतिप्रत्यराभिः ।**
**अष्टकैः षड्भिर्विश्वरूपैकपाशं त्रिमार्गभेदं द्विनिमित्तैकमोहम् ॥ ४॥**
**தமேகனேமிம்' த்ரிவ்ரு'தம்' ஷோட³ஶாந்தம்'**
**ஶதார்தா⁴ரம்' விம்'ஶதிப்ரத்யராபி⁴: .**
**அஷ்டகை: ஷட்³பி⁴ர்விஶ்வரூபைகபாஶம்'**
**த்ரிமார்க³பே⁴த³ம்' த்³விநிமித்தைகமோஹம் .. 4..**

ஒரே விளிம்பைக் கொண்ட சக்கரமாக இந்தச் சிருஷ்டி விளங்குகிறது. அது மூன்று குணங்களால் (சத்துவம், ரஜஸ், தமஸ்) ஆனது; பதினாறு பகுதிகளைக் கொண்டது; ஐம்பது ஆரங்களால் தாங்கப்படுகிறது; இருபது எதிர் ஆரங்களால் இணைக்கப்பட்டுள்ளது. ஆறு எட்டுக் கூட்டங்களால் (பல்வேறு தத்துவக் குழுக்களால்) அமைந்தது. பலவகை வடிவங்களை ஒரே பாசத்தால் கட்டிப்பிணைக்கும் இந்தச் சக்கரம், மூன்று மார்க்கங்களாகப் பிரிந்து, இரண்டினால் (புண்ணியம்–பாபம், அல்லது அவித்யை–வித்யை) உண்டாகும் ஒரே மோகத்தை உருவாக்குகிறது.

**पञ्चस्रोतोम्बुं पञ्चयोन्युग्रवक्रां पञ्चप्राणोर्मिं पञ्चबुद्ध्यादिमूलाम् ।**
**पञ्चावर्तां पञ्चदुःखौघवेगां पञ्चाशद्भेदां पञ्चपर्वामधीमः ॥ ५॥**
**பஞ்சஸ்ரோதோம்பு³ம்' பஞ்சயோன்யுக்³ரவக்ராம்'**
**பஞ்சப்ராணோர்மிம்' பஞ்சபு³த்³த்⁴யாதி³மூலாம் .**
**பஞ்சாவர்தாம்' பஞ்சது³:கௌ²க⁴வேகாம்³'**
**பஞ்சாஶத்³பே⁴தா³ம்' பஞ்சபர்வாமதீ⁴ம: .. 5..**

இந்தச் சம்சார நதி ஐந்து ஓடைகளைக் (ஐம்புலன்கள்) கொண்டது; ஐந்து மூலங்களிலிருந்து தோன்றுகிறது; அதன் ஓட்டம் மிகவும் வளைந்ததும் கடினமானதும் ஆகும். ஐந்து பிராணங்களின் அலைகளால் நிரம்பியுள்ளது; மனம், புத்தி முதலிய ஐந்து காரணங்களை அடிப்படையாகக் கொண்டது. ஐந்து சுழல்களைக் கொண்டது; ஐந்து வகை துன்ப வெள்ளங்களின் வேகத்தால் இழுத்துச் செல்லப்படுகிறது; பலவகைப் பிரிவுகளாகப் பிரிந்துள்ளது; ஐந்து மலைப்பாங்கான தடைகளை உடையதாக உள்ளது.

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

**सर्वाजीवे सर्वसंस्थे बृहन्ते अस्मिन् हंसो भ्राम्यते ब्रह्मचक्रे ।**
**पृथगात्मानं प्रेरितारं च मत्वा जुष्टस्ततस्तेनामृतत्वमेति ॥ ६॥**
**ஸர்வாஜீவே ஸர்வஸம்'ஸ்தே² ப்³ரு'ஹந்தே**
**அஸ்மின் ஹம்'ஸோ ப்⁴ராம்யதே ப்³ரஹ்மசக்ரே .**
**ப்ரு'த²கா³த்மானம்' ப்ரேரிதாரம்' ச மத்வா**
**ஜுஷ்டஸ்ததஸ்தேனாம்ரு'தத்வமேதி .. 6..**

அனைத்து உயிர்களிலும், அனைத்திலும் நிறைந்திருக்கும் அந்தப் பேரொளியான பரம்பொருளின் பிரம்மச் சக்கரத்தில் ஜீவன் (அன்னப்பறவை போல) சுற்றித் திரிகிறது. தன்னையும் (ஜீவாத்மா) இயக்குபவனையும் (பரமாத்மா) வேறுபட்டவர்களாக எண்ணிக்கொண்டிருக்கும் அது, இறைவனின் அருளைப் பெற்று அவரை உணர்ந்தவுடன் அமரத்துவம் (மோட்சம்) அடைகிறது.

**उद्गीतमेतत्परमं तु ब्रह्म तस्मिंस्त्रयं सुप्रतिष्ठाऽक्षरं च ।**
**अत्रान्तरं ब्रह्मविदो विदित्वा लीना ब्रह्मणि तत्परा योनिमुक्ताः ॥ ७॥**
**உத்³கீ³தமேதத்பரமம்' து ப்³ரஹ்ம**
**தஸ்மிம்'ஸ்த்ரயம்' ஸுப்ரதிஷ்டா²(அ)க்ஷரம்' ச .**
**அத்ராந்தரம்' ப்³ரஹ்மவிதோ³ விதி³த்வா**
**லீனா ப்³ரஹ்மணி தத்பரா யோனிமுக்தா꞉ .. 7..**

இந்தப் பிரணவமான “ஓம்” உயர்ந்த பரம்பிரம்மமாகும். அதில் மூன்றும் (அ, உ, ம) மற்றும் அழியாத அக்ஷரமும் நிலைபெற்றுள்ளன. இதன் உள்ளார்ந்த இரகசியத்தை பிரம்மஞானிகள் அறிந்து, பரம்பிரம்மத்தில் லயித்து, அதிலேயே நிலைபெற்று, பிறவியின் காரணமான யோனியிலிருந்து விடுதலை பெறுகின்றனர்.

**संयुक्तमेतत् क्षरमक्षरं च व्यक्ताव्यक्तं भरते विश्वमीशः ।**
**अनीशश्चात्मा बध्यते भोक्तृ-भावाज् ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः ॥ ८॥**
**ஸம்'யுக்தமேதத் க்ஷரமக்ஷரம்' ச**
**வ்யக்தாவ்யக்தம்' ப⁴ரதே விஶ்வமீஶ꞉ .**
**அனீஶஶ்சாத்மா ப³த்⁴யதே போ⁴க்த்ரு'-**
**பா⁴வாஜ் ஜ்ஞாத்வா தே³வம்' முச்யதே ஸர்வபாஶை꞉ .. 8..**

இந்த உலகத்தில் அழிவுடையதும் (க்ஷரம்), அழிவற்றதும் (அக்ஷரம்), வெளிப்பட்டதும் (வ்யக்தம்), வெளிப்படாததும் (அவ்யக்தம்) ஒன்றிணைந்துள்ளன. இவை அனைத்தையும் உலகின் ஈசன் தாங்கி

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

நடத்துகிறான். ஆனால் ஜீவன், அனுபவிப்பவன் என்ற எண்ணத்தால் பந்தத்திற்கு உட்படுகிறது. அந்தத் தெய்வத்தை உண்மையாக அறிந்தவுடன், எல்லா பாசங்களிலிருந்தும் விடுபட்டு முக்தி அடைகிறது. (தொடரும்...)

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon’ Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It’s Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon’ Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon’ Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon’ Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon’ Editor | Tirunelveli |